**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 17** **நாள்: 15.02.2017**

## பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகச் செயல்பாடுகள் குறித்து இந்திய ஆட்சிப் பணி பயிற்சி அலுவலர்களுக்கு ஆணையாளர் அவர்கள் விளக்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்கள் இன்று (15.02.2017) ரிப்பன் மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் முசோரி லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமியில் இருந்து தமிழகம் வந்துள்ள 17 இந்திய ஆட்சிப் பணி பயிற்சி அலுவலர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகச் செயல்பாடுகள் குறித்து விளக்கினார்.

முசோரி இந்திய ஆட்சிப் பணி பயிற்சி முகாமில் இருந்து சென்னை வந்துள்ள இந்திய ஆட்சிப் பணி பயிற்சி அலுவலர்கள் தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு–36, சர்மா நகரில் காய்கறிக் கழிவுகளை பயன்படுத்தி பயோ–மெத்தனேஷன் மூலம் சமையல் எரிவாயு தயாரிக்கும் கூடத்தினையும், வார்டு–34, அருள் நகர் பிரதான சாலையில் மட்கும் குப்பையின் மூலம் இயற்கை உரம் தயாரிக்கும் முறையினையும், ஜி.என்.டி.சாலையில் உள்ள அம்மா உணவகத்தின் செயல்பாடுகளையும், மாதவரம் மண்டலம், வார்டு–23, ஜி.என்.டி.சாலையில் மண்புழு உரம் தயாரிக்கும் முறையினையும், இராயபுரம் மண்டலம், வார்டு–58ல் காய்கறிக் கழிவுகள் மூலம் மீத்தேன் உற்பத்தி செய்து அதன்மூலம் மின்சாரம் தயாரிக்கும் முறையினையும், புரசைவாக்கம் சென்னை பள்ளியில் மாணவ, மாணவியர்களின் திறன் மேம்பாடு குறித்தும், ரிப்பன் மாளிகையில் பயன்படுத்தப்பட்டு வரும் இ–டாய்லெட் பயன்பாடு குறித்தும் பார்வையிட்டு செயல்பாடுகள் பற்றி அறிந்து கொண்டார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகச் செயல்பாடுகளான பணிகள், கல்வி, சுகாதாரம், திடக்கழிவு, மருத்துவம், நிதி மற்றும் நிர்வாகத் துறைகள் குறித்து விளக்கினார்கள்.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் துணை ஆணையர் (கல்வி) திரு.மா.கோவிந்த ராவ், இ.ஆ.ப. அவர்கள், துணை ஆணையர் (சுகாதாரம்) திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப. அவர்கள், துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) திரு.வெ.அன்புச்செல்வன், இ.ஆ.ப., அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.பிரவீண் பி நாயர், இ.ஆ.ப. அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப. அவர்கள், தெற்கு வட்டார துணை ஆணையர் திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப. அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**